**General Medical camp 2018**

The Institutional social Responsiplities cell and Rotary club of Chennai conducted free medical camp at AVIT campus. The camp was inaugurated by Dr AnuradhaGanesan Director VMRF. This camp was presided by Rt Ranjiprathap Rt Prabhasrinivasan, Chandrasekaran Ravishankar of Rotary club of Chennai. In this camp Free eye check up, Dental, ENT was benefited by surrounding 200 village peoples and AVIT faculty member also. The whole day camp was coordinated by Dr.S.P.Sangeetha and Mr.T.Srinivasan Head Operations AV Campus.

### ஆறுபடை வீடு தொழில் நுட்ப கல்லூரியில்

# இலவச பொது மருத்துவ முகாம்



திருப்போரூர், செப்.26-

காஞ்சிபுரம் மாவட்டம் திருப்போரூர் பையனூர் ஆறுபடை வீடு தொழில் நுட்ப கல்லூரியில் சென்னை ரோட்டரி கிளப் மற்றும் ஆறுபடை வீடு மருத்துவ கல்லுரியும் இணைந்து இலவச பொது மருத்துவ முகாம் நடத்தியது. இம்முகாமை சென்னை ரோட்டரி கிளப் நிர்வாகிகள் இரஞ்சித்பிரதாப் பிரபாசீனுவாசன் சந்திரசேகரன் ரவிசங்கர் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

கல்லூரி இயக்குனர் டாக்டர் அனுராதா கணேசன் முகாமை துவங்கி வைத்தார். மேலும் கல்லூரியின் முதல்வர் பி.சங்கர் மற்றும் தலைமை செயல் அலுவலர் தி.சீனுவாசன் ஆகியோர் முன்னிலை வகித்து முகாமிற்கு வந்த அனைவரையும் வரவேற்று பயனடையுமாறு கேட்டுக் கொண்டனர். இந்த முகாமில் பல், கண், காது, மூக்கு, தொண்டை மற்றும் உடல் பொது பரிசோதனை திறமையான மருத்துவர்களை கொண்டு பரிசோதனை செய்யப்பட்டது.

மக்கள் தொடர்பு அதிகாரி பத்மநாபன் ஏற்பாட்டில் பையனூர் கிராம மக்கள் மற்றும் சுற்று வட்டார மக்கள் 200 க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு பயனடைந்தனர் .